

D GOPAUL CHETTY,
**Editor New Reformer**
**MADRAS**

ஸ்ரீ

# ஆதி-திராவிடர் பூர்வ சரித்திரம்.

இது

சென்னை "ரிபாமர்" பத்திராதிபர்,

D. கோபால செட்டியாரால்

எழுதப்பட்டு,

சென்னை,

ரெநகி - ராமஸ்வாமி செட்டியார்

அச்சியந்திரசாலையில் பதிப்பிக்கப்பட்டது.

1920.

[கிரயம் 0-6-0.

# REVD: ALEXANDER SILVER, M.A.

அவர்கட்கு.

## உரிமை யுரை

---

வன்புறு வெண்புகட் டுண்டிட சீராட்டி
அன்பில் விழிநீர் ததும்பிய—நின்றனரால்
என்னிதயத் தேமலருஞ் சில்வர் துரையவர்கட்
கின்னூ லுரிமை யுடைத்து.

# ஆதி திராவிடர்

## பூர்வ சரித்திரம்.

வங்காள ராஜதானியின் மேற்கு அரைபாக வட களிலிருந்து கன்னியாகுமரி வரையிலுள்ள பாகங்களிலும், இலங்கைத்தீவிலும் பெலுசிஸ்தான் தேசத்திலும் கலப்பற்ற திராவிடர்கள் இருக்கிறார்கள். அவர்கள் மொத்தம் பதினொரு கோடியே முப்பதுலட்சம் ஜனங்கள். இதைத்தவிர கலப்புற்ற திராவிடர்கள் இந்தியாவில் சுமார் பத்துகோடி ஜனங்களிருக்கிறார்கள். மகமதியர் ஆறுகோடி இந்தியாவிலிருக்கிறார்கள். இவர்கள் மங்கோலிய துருகி நாட்டாரின் வமிசம் ஆகையால் இந்தியாவிலுள்ள சுமார் முப்பது கோடி ஜனத்தில் கலப்பற்ற ஆரியர்கள் மூன்றுகோடிதான் என்கிறார்கள். தமிழ், தெலுங்கு, மலையாளம், கன்னடம், துளுவம், கொச்சி, காண்டு, தோடா, கோட்டா, ராஜமகால், உரேயான், பிராஉளுஇ முதலிய பன்னிரண்டு பாஷைகளும் திராவிட பாஷைகள்.

இத்திராவிடர் இந்தியாவின் பூர்வீககுடிகள். ஆரியர் பின்னிட்டு வந்தவர்கள். திராவிடர் ஆதியில் யூபிரடீஸ், டைகிரிஸ் நதிகளின் மத்தியிலுள்ள "ஏலம" நாட்டிலிருந்து இத்தேசம் வந்தார்களென்று சிலர் சொல்லுகிறார்கள். வேறு சிலர் இந்தியாவின் தெற்கிலிருந்தும் கடல் கொள்ளப்பட்டதுமான "இலேமூரியா" கண்டத்திலிருந்து வந்தவர்களென்றும் சொல்லுகிறார்கள். வேறு சிலர் ஆரியர் இந்தியாவிற்கு பின்னிட்டு வந்தவழியாகவே இவர்களும் வந்து நியுஜீலண்டு

வரையில் பரவியிருந்த இந்தியாவின் தென்பாகத்தில் குடியேறி னர் என்கிறார்கள். வேறு சிலர் திராவிடர் மத்திய ஆசியாவி லிருந்தவர்களென்றும், சிலர் இமயகிரி மூலமாய் இந்தியாவின் வடகிழக்கு கணவாய் வழியாய் இத்தேசத்துக்கு வந்தனர் என்கிறார்கள். திராவிடர் இந்தியாவின் ஆதிகுடிகளே என் பாரும் உளர். இவைகளிலெல்லாம் கொஞ்சம் கொஞ்சம உண்மை இருக்குமென்றே தோன்றுகிறது.

1800 வருஷங்களுக்கு முன்னிருந்த தமிழர் என்னும் நூலில் ஸ்ரீமான் கனகசபை என்பவர் இந்தியாவின் பூர்வகுடி கள் வில்லவர், மீனவர் என்றும, மத்திய ஆசியாவிலிருந்து வந்த நாகர்களால் இவர்கள் ஜெயிக்கபபட்டாகளென்றும தேவ நாகரி என்கிற பாஷைகளின் எழுத்துகளை நாகரிடம் ஆரியர்கற்றுக்கொண்டார்களென்றும் சொல்லுகிறார் மேலும் தமிழ் சங்க நூல்களில் கூறப்படும் மறவர், எயினர், ஒலி யர், ஒவியர், அருவளர், பரத்துவர் முதலியோர் மேல்கூறிய நாகவமிசத்தார் என்றும் கூறுகின்றார். பின்னிட்டு இந்நாகர் கள் மங்கோலியாவிலிருந்து வநத தமர்லிடி அலலது தமிழர் களால் ஜெயிக்கபபட்டார்களென்றும சொல்லுகிறார். மே லும் இத்தமிழரில் மாரர் என்போர் பாண்டிய ராஜ்ஜியத தையும், திரையர் சோழராசசியததையும, வானவர் சேர ராச்சியத்தையும, கோசர் கொங்குநாட்டையும் ஏற்படுத் தினதாகச் சொல்லுகிறார்.

இந்தியாவின் பூர்வீக குடிகள் கருப்புநிறமுள்ள ஓர் வகை நீக்ரோ ஜாதியார் என்பாரும் உளர். நாகர்களே பூர்வ குடிகள் என்று சொல்பவரும் உளர். வேறு சிலர் அம்மா திரி கருப்புநிறமுள்ள பூர்வகுடிக ளிருந்திருந்தாலும் அவர் கள் நாகர்களுடன் விவாகம் முதலியது செய்துகொண்டு கலந்துகொண்டார்கள் என்பதற்கு சந்தேகமில்லை என்கிறார்

கள். டாக்டர் கால்ட் வெல் துரை "பறையர்" என்போர் முதல் எல்லோ நும் திராவிடரே, வேறு பூர்வகுடிகளில்லை என்கிறார். ஆயினும் நாகரே பூர்வகுடிகள் என்று தோன்று கிறது கி மு. 11-வது நூற்றாண்டில் தமிழர் வந்தபிறகு நாகரும் தமிழரும் கலந்து திராவிட ராயினா.

1911 ஆம் ஜூலை 28உ யுள்ள ரிபோர்ட்டில் சர்க்கார் சாசன சாஸ்திரவித்துவான் அடியில்வருமாறு கூறுகின்றனர். "மகாபாரதவீரன் அருச்சுனன் நாகஇராணியையும, தமிழ் நூல்களில் சோழ அரசர்களைப்பற்றி அவ்வித சங்கதியை யும, நாகர்கள் பல்லவ அரசாகளுடன் விவாகம் செய்துகொண் டதாகவும ஏற்படும சரித்திரஙகளால் நாகர்கள் இந்தியா வின் பூர்வகுடிகள் என்று ஏற்படுகிறதுடன் வடககிலி ருந்துவநத அரசர்களால ஜெயிக்கப்பட்டார்களென்றும அப் படிவநத அயலாருடன் விவாகங்கள் செய்து கலந்தபடியி ஞல் நாகர் என்னும வமிசம மறைநதுவிட்டதாகவும ஏற் படுகிறது. மணிமேகலையில் அடியில் கண்ட பாடலிருக்கிறது:-

"வெனறிவேற் கிள்ளிக்கு நாகநாடாள்வோன
றன்மகள பீலிவளை தானபயநத,
புனிற்றிளஙகுழவி —"

அதாவது. "நாகநாட்டு அரசன் குமார்த்தி பீலிவளை என்பவள், ஜெயக்கொடிஏந்திய சோழன் கில்லி என்பவ னுக்கு ஈன்ற இளங்குழநதை."

இதனால் தமிழ் அரசனுகிய கில்லிக்கும நாகநாட்டு பெண் பீலிவளை என்பவளுக்கும் விவாகம் நடந்ததாக ஏற்படு கிறது. இமமாதிரியாக தமிழர்களும் நாகர்களும் விவாகங் கள் செய்துகொண்டு கலப்புற்றார்கள். இவ்வகை கலந்தவர் கள் சமபூமியில் உள்ளவர்தான். அம்மாதிரி கலக்காதவர் மலைகளில் இன்னு மிருக்கின்றனர். நீலகிரியிலுள்ள தோ

டர்கள் கலப்பற்ற திராவிடர்கள் என்றும், காடர் குறும்பர் முதலியவர்கள் பூர்வகுடிகள் என்றும சொல்லுகிறார்கள்.

தமிழிலக்கண வித்துவான்களும் கூட திராவிட நாட்டி லிருந்தவர்களை மககள், தேவர், நரகர் என்றனா. இதில் நரகர் என்பது நாகர், மக்கள் என்பது தமிழ் மககள், தேவர் என்பது ஆரிய பிராமணர். நரகர் என்பது நாகர் என்கிற பூர்வகுடிகள். காடுகளிலும தாழ்ந்த நிலங்களிலும விளங்காத இடங்களிலும (நரகம) இருநத பூர்வகுடிகளுககு நாகர் என்றும பெயர். மேற்குறியவைகளால திராவிடர் என்பது ஆதிகுடிகள் - நாகர் - தமிழர் என்கிற மூவகை ஜனங்கள் ஒன்று பட்டபிறகு உண்டான பெயர் ஆதிகுடிகள் இல்லை என்று ஏற்பட்டால், நாகருமதமிழருமசோநது திராவிட ராயினர்.

மணிமேகலை, பத்துபாட்டு முதலிய நூல்களில் நாகர்களைப்பற்றி சொல்லியிருக்கிறது. பூர்வீக புத்தமத நூல்களிலும நாகர் என்கிற பெயர் அடிககடிவருகிறது.

சிலப்பதிகாரத்தில் அடியில் கண்டவைகள் காணபபடு

"நாக நன்னாட்டு நானூறி யோசனை
வியன்பாதலதது வீழ்ந்து கேடெய்தும்"
"நக்க சாரணர் நாகர் வாழ்மலை"

நாகநாடு என்பது தமிழகத்துககு கிழககு அல்லது தென்கிழக்கிலிருப்பதாக சொல்லப்பட்டிருக்கிறது. தமிழ் ஜில்லாக்களில் கள்ளர் வேடர்களில் நீலன், நாகன் என்கிற பெயர்களை சாதாரணமாய் காணலாம். கள்ள ஜாதியினரா கிய திருமங்கை ஆள்வாருக்கு நீலன் என்பது பெயர். அவர் மலையரசன் ஒருவனுக்கு ஓர் துணிகுடுத்தார் - அதை சிறுபாணாற்றுபடையில், "நீல நாகன் நல்கிய கலிங்கம்" என்று

கூறப்பட்டிருக்கிறது. கண்ணப்பநாயனார் தகப்பனுக்கு நாகன் என்று பெயர் அவர் ஓர் வேடர். நாகர்கள் வீரர்கள். அந்நாகரில் ஒலிநாகன், மூகனிநாகன், சங்கநாகன், நீலநாகன் என்று நாலவகை யுண்டு.

மறவர், எயினர், ஒலியர், ஓவியர், அருவலர், பரத்துவர் இவர்கள் நாகவமிசத்தை சேர்ந்தவா. பூர்வீக தமிழ் நூல்களில் மறவன், எயினன் எனகிற வார்த்தைகளை அடிக்கடி காணலாம. அவர்கள் வில்வித்தை தெரிநதவர்களாகவும, யுத்தவீரர் களாகவுமிருநதார்கள. பாண்டிய நாட்டில் இபபொழுது கூட மறவர்களை அதிகமாய் பாாக்கலாம். பூர்வீக காலமுதல எயினர்கள் பல்லவ சோழநாட்டிலிருந தார்கள். பறையர் என்போர் மேல்குறித்த எயினர்தான். இவர்களை தற்காலத்திலும் கூடவட ஆர்க்காடு,செங்கலபட்டு, தஞ்சாவூர் ஜில்லாககளில் அதிகமாய் காணலாம இவ்விடங் களிலதான் எயினா முன்காலத்திலிருநதது.

கி. பி. இரண்டாவது நூற்றாண்டிலிருந்த மாங்குடி கிலார் எழுதிய ஓர் நூலில் அடியிலகண்ட பாடலிருக்கிறது

"துடியன் பாணன் பறையன் கடம்பனென், றிநநான் கல்லது குடியுமில்லை (புறநானூறு) இதில்தான் முதல்முதல "பறையன்" என்கிறபதம தொழில்பெயராக காணப்படு கிறது இவைகள் எல்லாம் தொழிலைக்காண்பிக்கும பெயர் கள். இதைத்தவிர 11-வது நூற்றாண்டிலிருந்த ராஜராஜ சோழன் காலம்வரையில் பறையன் என்ற பெயரே தமிழ் நூலிலாவது சாசனங்களிலாவது காணோம். கி. பி. 11-வது நூற்றாண்டில் பறையன் என்பது ஜாதிபெயரானது. டாக்டர் ஒப்பார்ட்துரை, சமஸ்கிருத பகரியா (மலைநாட்டின்) என்பதிலிருந்து பறையன் என்ற பதம் உண்டானதாக சொல்லுகிறார். பறை அடித்ததால் இவர்களுக்கு பறையர்

என்கிற பெயர் உண்டானது என்றும் சொல்லப்படுகிறது. கி. பி. இரண்டாவது நூற்றூண்டுமுதல் 11-வது நூற்றூண்டு வரையில் பறையன் என்பது இந்த அர்த்தத்தைதான் உடையதாயிருந்தது. பௌத்தமதமும் சமணமதமும் அடங்கியபிறகு பார்ப்பார் ஜாதிவித்தியாசங்களை கடூரமாய் ஏற்படுத்தியபோது இப் பறையரென் போரைப்பிரித்து அவர்களை தாழ்மை படுத்தினர். இந்த விவரங்களை பின்னிட்டு றைபோம்

## 2. அத்தியாயம்.

### "பறையர்" என்போர் ஆதி திராவிடர் எனல்"

திராவிடர் என்போரில் முதல் முதல் இதேசத்தில் லிருந்த பூர்வகுடிகள் ஓர்வித கருப்புநிற ஜாதியார் என்பர். அவர்களிருந்தது சந்தேகமாகவே தோன்றுகிறது பின்னிட்டு வந்தவர்கள் நாகர். இந்நாகவமிசத்தை சேர்ந்த எயினர் வகுப்புக்கு "பறையர்" என்போர் சேர்ந்தபடியினுல் இவர்களையே ஆதி திராவிடர் என்பர். அப்படி சொல்லவும் நியாயமிருக்கிறது. ஆயினும இவர்கள் ஆதி திராவிடர் என்கிற பெயரிட்டுகொண்டால் மற்ற திராவிடர்களுக்கும இவர்களுக்கும ஓர் வித்தியாசம தோன்றும. அவ்வித வித்தியாசத்தை உற்பத்தி செய்யக்கூடாது. தமிழ் நூலில்,சிறப்புற்று விளங்கும் ஸ்ரீமான் டி. பொன்னம்பலம்பிள்ளையவர்கள் "பறையர்" என்போரைப்பற்றி அடியில் குறித்தவாறு ஜஸ்டிஸ் பத்திரிகையில் வரைகின்றனர். "ஆதித்திராவிடர் என்கிற பாத்தியதையைக் கேட்கிற பஞ்சமர்கள் கூறுவது ஏறக்குறைய உண்மைதான். "பஞ்சமன்" என்கிற வார்த்தையானது தாழ்ந்த ஸ்திதியிலிருந்து நீக்க யாரோ அவ்வார்த்

தையை கொஞ்ச காலத்துக்குமுன் புதிதாக உற்பத்திசெய்திருக்கிறார்கள். அவர்கள் உண்மைப்பெயரான "பறையன்" என்பதற்கு "பேசப்படப்பட்டவன்" என்பது அருத்தம். பூர்வீக இந்தியாவில் மற்றவர்கள் அவர்களைப்பற்றி பேசும்படியான பேர்பெற்ற மனிதர்களா யிருந்திருக்கவேண்டும். அந்த காரணத்தினால் தங்களை சுற்றுபறவிய நாகரீக கருத்துகளை தெரிந்துகொள்ளாதபடி அவர்கள் பிறரை விலக்கியிருந்திருக்கவேண்டும். அதினால் அவர்கள் பின்னடைந்திருக்கவேண்டும். எல்லா சுதேசிய உற்பத்தியான ஜனங்களும் இம்மாதிரி யாய்விட்டார்களென்று சரித்திரங்களாலறிகிறோம். சீனதேசத்திலும் ஜப்பானிலும் அயல் நாட்டாரோடு ஜனங்கள் சம்மந்தப்படாதிருக்க விரும்பியகாலமுமிருந்தன. இந்துதேசத்திலேயே ஐரோப்பியர் வந்தபோது ஏதாவது ஒன்றை யிழக்கக்கூடியவர்கள் அவர்களை நெருங்கவில்லை. மிகவும் இழிவான ஸ்திதியிலிருந்த "பறையர்கள்" வேலைக்காரர்களாக அவர்களிடம் அமைந்தார்கள். அப்படியில்லாமல் கல்விக்கு சுதந்திரரா யிருந்த பிராமணரோ படிப்பு விஷயங்களை பிடித்துகொண்டு எஜமானாக ளாகிவிட்டார்கள்.

இன்னும் சொந்தத்தில் நான் ஒன்றும் சொல்லாமல், ஜென்மம் சொத்தின் உற்பத்தியைக் கண்டுபிடிக்க அதிக கஷ்டப்பட்டவரும் நினைத்தவரும் அறிவை செலுத்தினவருமான திருவனந்தபுரம் ஐகோர்ட் ஜட்ஜி ராமன்தம்பி என்பவர் எழுதிய ஜென்மி குடியன் கம்மிட்டி ரிபோர்ட்டு முகவுரையிலிருந்து சிலவற்றை சொல்லுகிறேன். அவர் தன்னிட விசாரணையில் சந்தர்ப்பவசமாய் பறையர்களையும் அன்னவர்போன்றவர்களையும் குறித்து எழுதியிருக்கிறார். இந்தியாவின் வடமேற்கு மகாணங்களிலிருக்கும் பிராமணர்களைப்

பற்றி பேசும்போது போலன் கணவாய் முதல் பர்சியன் வளைகுடா வரையிலிருக்கும் பிரம் என்கிற மலைகளிலிருந்து அவர்களுக்கு பிராமணர் என்கிற பெயர் வந்தது என்கிறார் ஒருவேளை அந்த பிரம் என்பது வடகிழக்கு பெலுசிஸ்தானிலிருந்த பாடர், பரடர் என்பதிலிருந்து வந்திருக்கலாமென்றும் சொல்லுகிறார். "பறையன்" என்னும் வார்த்தை இவ்வார்த்தைகளோடும், "பர" என்றால் மலை யென்கிற அர்த்தமுள்ள வார்த்தையிலிருந்துவந்த பரவன், பாரியா பஹரியன், மாலா பார, மராஸ் மலையிலுள்ளவன் என்கிற அர்த்தமுள்ள வார்த்தைகளோடு சம்மந்தப்பட்டிருக்கிறது. (பக்கம் 39)

40 - வது பக்கத்தில் ஜட்ஜி ராமன் தம்பியானவர் அடியில்கண்ட டாக்டர் ஒப்பார்ட் துரையின் கருத்தை காண்பித்திருக்கிறார் "பறையன், பஹறையன் முதலிய வார்த்தைகள் பூர்வீக திராவிடர்களின் வம்சத்தார் என்றும், "ப" முதலில் உள்ள இந்த குடிகளெல்லாம் திராவிட வம்சத்தின் பூர்வீக ஜனங்கள்...பறையன், ஒலியன், வள்ளுவன் முதலியவைகள் பூர்வீக மகிமையின் அடையாளங்கள் இப்பொழுதும் கண்டுபிடிக்கலாம். மலையாளத்தின் "வள்ளுவநாடு" என்பதும். திருவனந்தபுரத்தின் "புலையனார் கோட்டம்" என்பதும் அவர்களிடம் நீங்கிப்போன பெருமையைக் காண்பிக்கிறது."

அவர்கள் அதிக பலசாலிகளான ஜனங்களால் ஜெயிக்கப்படுகிறவரையில் அதற்கு அரசர்களாகவும், வயல் உரிமைக்காரர்களாகவும் ஆதியிலிருந்த தங்கள் சுதேசமாகிய சேரநாட்டிற்கு, மலையாளத்தில் புலையர்களுக்கு குடுக்கப்பட்டிருக்கும் செருமன் - செருமி என்கிற வார்த்தைகள் சம்மந்தப்பட்டது என்று ஓர் பெரியவர் ஆதரவால் ஏற்படுகிறது. குரும்பநாட்டு குரும்பரும், வள்ளுவநாட்டு வள்ளு

வரும் புலையனூர் கோட்டத்தை கட்டியபுலையரும், அதேகதி யை யடைந்தார்கள். நெடுவன் காடு என்கிற கோகோஷ மக்களத்தின் புலையர் இராணியால் கோகோஷமங்களம் கார் காரருக்கு அனுபபிய கடிதமாக எண்ணப்பட்ட ஓர் ஓலை சீட்டை தான் பார்த்ததாகவும் அந்த கமபிட்டியின் பிரசி டென்டுக்கு ஒரு பென்ஷன்பெற்ற தாசீலதார் சொன்னூர்."

# 3. அத்தியாயம்.

## "பறையர்" மேன்மை.

பாரப்பார் பறையர் என்போரை தாழ்தது வதற்குமுன் பறையா என்போர் நல்லஸ்திதியில் இருநததாகவே ஏற் படுகிறது தண்டகாரணிய வனத்தில் முதலில் சாகுபடி செய்யவும அவ்விடங்களில கோட்டைகள் கட்டவும காடு களை வெட்டினவர்கள் எயினாகள்தான் காடுகளை வெட் டினவர்களுக்கு வெட்டியான் என்கிற பெயர் வந்தது.

சாகுபடிககு கிணா தோண்டினவாகளுக்கு தோட்டி (தோண்டு=வெட்டு) என்கிற பெயர்வநதது. கி. பி. 3, 4-வது நாற்றுண்டி லிவாகள் அரசாகள் ஆம்பூர் வே லூர் முதலிய இடங்களில ஆண்டுவந்தார்கள். எயினர் களுக்கு கொட்டகாரம் என்கிற களஞ்சியங்களும், எயில் எனும் கோட்டைகளும் இருந்தன. அவர்களுக்கு பாணன் என வாத்தியக்காரர்களும் வள்ளுவன். என குருக்களும், தேகபயிர்ச்சிக்காரர்களாகிய பனிக்கர்களும், செம்மான் என் கிற செருப்புதைக்கிறவர்களும், அம்பட்டன் வண்ணான் முதலியவர்களு மிருந்தார்கள். இப்பறையரென் போர்வமி சத்தார்தான் பூர்வீகத்தில் கிராமங்களை ஏற்படுத்தினா. அவர்

கள் ஏற்படுத்தின கிராமங்களுக்கு அவர்கள்தான் அதிகாரிகள். இப்பொழுதும் எல்லே தகாரர்களே பறையருக்கு கான் பஞ்சாய்த்து சொல்லிக்கொள்ளுகிருர்கள். 1910ஞ த்திய ரிபோர்ட்டில் மதராஸ் கவர்ன்மென்ட் Epigraphist சொல்லுகிறதாவது "11-வது நூற்றாண்டின் ஒரு சிலா சாசனத்தில் முடிபாகவர் என்னும கிராமத்தில் ஓர் கோவிலுக்கு பாத்தியப்பட்ட நிலத்தின் பாத்தியதையை வேசாலி பறையனும் அவனிட மந்திரிகளும் பைசல் செய்ததாக சொல்லியிருக்கிறது." இக்காலத்திலும் தஞ்சாவூர் ஜில்லாவிலிருக்கும் திருவாலூரில் சிவன் பண்டிகைகளில் எவற்றிலும சுவாமி ஊர்கோலம் வருமபோது பறையன்தான வெள்ளைக்குடை பிடித்து முன்பாக செல்லுகின்ருன். சென்னைபபட்டணத்தில் நாளைக்கும் பெத்தநாய்க்காமபேட்டையில் பிரங்கமாய் தெருக்களில ஏகாத்தா மாரிபகதகதில் யானைபின்பேரில் உட்கார்ந்துகொண்டு அந்தமமைககு தாலிகட்டபபட்டவன் பறையனே...சிதமபரத்தில் பேரிறைவன் சிவன்பக்கத்தில் யானைமேல் உட்கார்நது வீதிகளில் ஊர்கோலம வருமபோது புரோகிதர்போன்று சாமரம வீசப்பட்டவன் பறையனே. சர்வம் ஜகநாதம என்று சொல்பவர்களுக்கு பிரசாதம குடுப்பவன் பறையனே. பேலூர், மேல்கோட்டை முதலிய இடங்களிலிருககும கோவில்களில பரையன் ஆக்ஷேபனையன்றி உள்ளேபோய் கடவுளை நேரில் தரிசிக்கிருன் ஸ்ரீராமானுஜருடன் கூடபோய் டில்லிபாச்சா அமத்ஷாவின் குமார்த்தியிடமிருந்து ரங்கநாயகர் சிலையை கொண்டுவந்தவர் பஞ்சமர்தான். இபபறையர் வமிசத்தில் உதித்த திருப்பாணள்வார் கடவுளை திருத்தாண்டகம் செய்ய செய்தார், நந்தன் என்பவா கடவுளை ஆலிங்கனம் செய்துகொண்டனர். வீரபாகு என்பவா அரிச்சந்திரனை அடிமைகொண்டார் - திருவள்ளுவர் என்கிறவர் மதுரைசங்கத்தின் சங்கப்பலகையின

பேரில் ஆச்சரியமான நடவடிக்கை நடத்திய குறளை எழுதினர். ஸ்ரீராமானுஜ சுவாமிகள் இக்குலத்தாரை, திருகுலத்தார் என்றார்.

தற்காலத்திலேயே இப்பறையர்களுக்கு இவ்வித சிறப்புகளிருக்குமாயின் பூர்வீகத்தில் எவ்வளவு சிறப்புற்றவர்களா யிருக்கவேண்டுமென்று சொல்லவேண்டியதில்லை. இவர்கள் ஓர்காலத்தில் தென்னிந்தியாவில் அரசவமிசத்தை சேர்ந்தவர்களா யிருந்தார்களென்பதற்கு சந்தேகமில்லை. கர்னல் ஆல்காட்டுதுரை சொல்லுகிறபடி "ராஜியங்களும் மதங்களும் மாறினபோது, பறையர் அரசர்கள் தங்கள் தேசத்தையும், பறையர் கனவான்கள் தங்கள் செல்வத்தையும், பறையரில் தாழ்வானவர்கள் தங்கள் எல்லாவற்றையு மிழந்தார்கள்." ரெவிளண்ட் கௌடி என்பவர், பறையர்களும் பூமியும் என்கிற வியாசத்தில் அடியில் வருமாறு வரைந்துளார் "அழிந்த பிரபுக்கள்பேரில் அன்பு பாராட்டப்பட்ட ஜனங்களிருக்கிறார்கள்; அன்னவருக்கு நான் சொல்லுவதாவது,'இந்த தேசத்தில் அப்பேர்ப்பட்ட பிரபுக்கள் வகுப்பிற் சேர்ந்தவரில் பறையர்கள் பூர்வீகமானவர்கள் என்றும் அந்த காரணத்தால் தயாளமுள்ளவர்களா யிருக்கவேண்டுமென்றும் சொல்லுகிறேன்.

# 4. அத்தியாயம்.

## பறையர் எப்படி தாழ்த்தப்பட்டார்கள்.

மேல்கண்டபடி எல்லாம் சிறப்புற்றிருந்த 'பறையர்" என்போர் யாரால் எப்படி தாழ்த்தப்பட்டார்கள் என்பதை சற்று விசாரிப்போம். இப்படி "பறையரைத் தாழ்த்தியவர்" ஆரியபிராமணர். இவ்வாரியர் சுமார் மூவ்வாயிரம் வருஷங்க

ளுக்குமுன் மத்திய ஆசியாவிலிருந்து இந்தியாவின்வடமேற்கு கணவாய் வழியாய் இந்தியாவிற்கு வந்தனர். இவர்கள் வந்து இந்தியாவில் விந்தியபர்வதத்திற்கும் நர்மதைக்கும் வடக்கில் தாங்கள் பெயரிட்ட "ஆரியவர்த்தம்" என்கிற பாகத்தில் நெடுங்காலமிருந்தனர். இவர்கள் பூர்வீக சாஸ்திரங்களின்படி ஆரிய வர்த்தத்தைவிட்டு தென்புறம் வரத்தகாதவர். தென்னிந்தியாவில் தமிழர்கள் ஆரியருக்கு இடங்கொடாமல் தாங்கள் தமிழ் தெலுங்கு முதலிய திராவிட பாஷைகளைப் பேசிக்கொண்டு சுயாட்சியாய் நெடுங்காலமிருந்தனர். இத்திராவிடர் ஜாதிகுல வேறுபாடுகளற்றவர்களாய் ஒருவரோடொருவர் விவாகம் பிரிதிபோசனம் முதலியவைகள் எவ்வித ஆக்ஷேபனையுமின்றி செய்துகொண்டும், பிரதேசங்களுக்கு கப்பல் யாத்திரைசென்று வியாபார முதலியது செய்தும் கல்வியிற் சிறந்தவர்களாகவும் அதிக நாகரீகமுடையவர்களாவுமிருந்தார்கள். இத்திராவிடராஜ்ஜியங்களைப்பற்றி மனுதர்ம சாஸ்திரத்திலும் ஆரியர் புராணமாகிய ராமாயணத்திலும் சொல்லப்பட்டிருக்கிறது. திராவிட நாட்டின் சிறப்பைப் பற்றியும் அவர்கள் நாகரீகத்தைப்பற்றியும் இராமாயணத்திலேயே பரக்ககாணலாம். இவ்வண்ணம் சிறப்புற்று சுத்த சைவசீலராய் சகோதரத்துவம் நிறைந்து சுகமாய் வாழ்ந்து வந்த நாட்டிற்கு ஆரியா முதலில் யாத்திரைப் பிரயாணிகளாக வந்தனர். அவர்களுக்கு திராவிடர் "மிலேச்சர்" என்று பெயரிட்டனர். பண்டைகாலத்து நிகண்டுகள், திவாகரம், பின்கலந்தை முதலியவைகளில் "ஆரியர்" என்பதற்கு "மிலேச்சர்" என்றே சொல்லப்பட்டிருக்கிறது. இவ்வாரியரில் சிலராவது அனுசரித்துவந்த ஆசாரங்களும் நடத்தைகளும் திராவிடர்களின் நடவடிக்கைகளுக்கு தாழ்ந்திருந்தமையால் அம்மாதிரி "மிசேச்சர்" என்று பெயரிட்டிருக்கவேண்டும். சமஸ்கிருத பாரதத்திலேயே சிந்துநதி

யின் கணவாயிலிருந்த சில ஆரியர்களுக்கு "மிலேச்சர்" என்று பெயரிடப்பட்டிருக்கிறது. மேலும் ஆரியருக்கு "சுரர்" என்கிற ஒரு பெயர் உண்டு. அதன்பொருள் "சுரா" சம்பந்தமுடையவர் எனப் புலப்படுகிறது "சுரா" என்பது கள், மது என பலபொருள் குறித்த ஒரு மொழியாதலால் சுரர் என்பதற்கு கள் குடியா என்பதே பொருளாம. இவ்வாரியர்கள் குதிரை ஆடு மாடு முதலியவைகளை தின்பதுடன் சோமபான மென்னும் கட்குடித்தலு முடையவராதலினால், வைதீக கிரியை என்று யாகங்கள் செய்வதும, அவற்றுள் ஆடு மாடு அசுவமாதிய இவைகளை பலியிட்டு புசிப்பதுமன்றி புருஷமேத யாகமென மனிதரையும பலியிட்டு தின்றுவந்தார்கள். இதனாலேதான ஆரியருக்கு ஆதிகாலத்தில மிலேச்சர் என்றும சுரர் என்றும பூர்வகால நூலாசிரியர்கள் கூறியிருக்கின்றனர். மேலும தமிழகத்தில முதல முதல வரும்போது ஸ்தம்பத்தின்பேரி லாடுபவர்களாகவும் வந்தார்கள் - ஆகையினால் தமிழர்கள் அவர்களை தொம்பரென்றும ஜாலவித்தைக்காரர்களென்றும நினைத்தார்கள். "ஆரியக் கூத்தாயினும காரியத்தின்பேரில கண்ணாயிரு" என்கிற பழமொழியில் நாளைவரையில் ஆரியக்கூத்து என்கிற பதம தமிழிலிருக்கிறது. மேலும் இன்னொருபதமாகிய "ஆரியப்பாவை" என்பது ஆரியர்கள் தமிழ்நாட்டில் ஆட்டக்காரர்களாக திரிந்துகொண் டிருந்தார்களென்பதை ஞாபகப்படுத்துகிறது. இவ்விதமாக ஆரியரில் சிலரிருந்தபோதிலும் அவர்கள் மொத்தத்தில அறிவுள்ளவர்களாகவும் நாகரீகமுடையவர்களாகவே இருந்தார்களென்று ஏற்படுகிறது. இவ்வாரியர் தமிழகம் வந்துசேர்ந்து சுமார் 400, 500 வருஷங்களுக்கு பின்னர் எழுதப்பட்ட தொல்காப்பியத்தில் பொருள்திகாரம 502-வது பாடலில அடியில்வருமாறு ஆரியரை தாழ்மையாக கூறியிருக்கிறது.

"பார்ப்பான் பாகன் ஒருழி செவிலி
சீர்சரு சிறப்பிற் கிழவன் கிழத்தியோ
டளவியன் மரபினறு வகை பேருங்
களவினிற் கிளவிக் குறிய ரெமப."

இவ்வாரிய பிராமணர்கள் கடவுளுக்கும் மனிதர்களுக்கும் மத்தியில் தாங்கள் நிற்பவர்களென்றும், அநேகவித மந்திரவித்தைகளை தெரிந்தவர்களென்றும், மனிதர்களுக்கு தாங்கள் தேவர்களென்றும், தாங்கள் எதையும் செய்ய சக்தியுள்ளவர்களென்றும், நவக்கிரகங்கள் தாங்கள் சொல்லுகிற படி நடக்கவேண்டியவைகளென்றும், வேண்டும்போது மழை பெய்யச்செய்ய சக்தியுள்ளவர்களென்றும் தமிழர்களை பலவகையில் பயமுறுத்தினர்கள். பண்டைகாலத் தமிழரசர்கள் நீங்கி விபசாரத்தால பிறந்த தமிழரசர்களை கைவசப்படுத்திக்கொண்டு பலவித தந்திரங்கள்செய்து ஏமாற்றி, குற்றமற்ற தமிழர்களை தங்களிட தீய ஒழுக்கங்களையும் ஆசாரங்களையும் ஏற்றுக்கொள்ளும்படி செய்தனர்.

தமிழ் நூல்களெல்லாம கடலுக்கு இறையாய்விட்ட படியினலே, பின்னிட்டுவந்த தமிழ் வித்துவான்கள் வியாசர் கட்டுபாடுசெய்து எழுதிய நூல்களையே ஆதாரமாக எண்ணி தமிழர் எல்லாம ஆரியரென்று சரித்திரம் தெரியாமல் கூறி போயினர். ஆரியர் தமிழர்களிடத்திலிருந்து தங்களுக்கு வேண்டியது எவ்வளவோ அவ்வளவு தெரிந்துகொண்டு, தங்கள் சுயநன்மைகளைக்கோரி எழுதிக்கொண்ட சுருதிஸ்மிருதி இதிகாசங்களையே தமிழ் வித்துவான்கள் உண்மையான நூல்களென நம்பி தாங்கள் அவைகளை அனுசரித்தும பிறரை அனுசரிக்கும்படி ஏற்பாடுகள் செய்துவிட்டு போயினர். அவ்வித கொள்கைகளையும அனுசரிக்க அநேக நூல்களையும் எழுதிவிட்டார்கள். தமிழகத்தில் ஆரியரிட ஆசாரங்களையும் நடவடிக்கைகளையும் ஒற்றுக்கொள்ளாதவர் தாழ்ந்தவர் என்

கிற கருத்தும் பரவியது. இவ்விதமெல்லாம் தமிழர்களை ஏமாற்றி தங்கள் ஆசாரங்களையும் தீய ஒழுக்கங்களை எல்லாம் ஏற்றுககொள்ளும்படி ஆரியர் செய்தனர். அவ்வகை ஏற்படுத்தியதில் ஜாதிவித்தியாசம் என்பது ஒன்று. கபிலர் தம அகவலில பிராமணரைக்குறித்து சொல்லும்போது,

"முற்படைபபசனில் வேறுகிய முறைமைபோல
நாலவகை ஜாதியை யிங்காட்டினீர் நாட்டினீர"

என்றார்.

தமிழகததில ஜாதி வித்தியாசங்கள் கிடையா. ஜாதிப் பெயர்களெல்லாம தொழிலைக காண்பித்ததே ஒழிய யாதொரு ஜாதியையும காண்பிக்கவில்லை. கிறிஸ்துபிறநதபின் 800 வருஷங்களானபின்னும ஒருவரோடொருவர் விவாகம் போசன முதலியது செய்துக்கொண்டு வநதார்கள். கி. பி. 14-வது நூற்றாண்டின் மத்தியில் "வள்ளுவபறை பதினெட்டுஜாதி" யிருநததாக ஏற்படுகிறது. தமிழகததில் ஆரியரிட நாலவகை வகுபபாகிய பிரம க்ஷத்திரிய வைசிய சூத்திர வகுபபுகளை ஏற்படுத்த முயன்றபோது பிராமண பட்டம தமிழ்ஜாதியா யாருககும் கூடுககாமல் அதை தாங்களே பற்றிகொண்டனா. மற்ற மூவகை ஜாதிகளை ஏற்படுத்தியது 1. போஜனம, 2. தொழில, 3 மதம, 4. இடம இவைகளை யனுசரித்து ஆரியரும திராவிடரும கி. பி. 250-வது வருஷமவரையில் மாமிச பட்சணிகளா யிருநதார்கள். சமனமதம வநதபிறகு பிராமணர் அதை விட்டுவிட்டார்கள். திராவிடரில் சிலரும அதை நீக்கினர். அதிலும் பிராமணர்களுககு வேண்டிய பிராணிகள் அதிக மேன்மையானவைகள். அவ்வகை பிராணிகளை கொல்லுதல பாவம் என்றார்கள். பிராமணருககு வேண்டிய பஞ்சகவியததை தரும் பசு பரிசுத்தமானதாயிற்று. அதைக் கொல்லுதல் பெருத்தபாவமென்று பிராமணர்கள் சொன்

ஞர்கள். பத்துபாட்டிலும் புறநானூற்றிலும் எயின வேடர்கள் பன்றி யிறைச்சியும் காட்டுப்பசுவையும் தின்று மதுபானஞ் செய்துவந்தார்களென்று சொல்லப்படுகிறது. தற்காலத்திலும் அவ்வழக்கம் நீங்கவில்லை. எயினராகிய "பறையர்" என்போர் பசு மாமிசத்தை கொன்று தின்றபடியினால் பிராமணர் அவர்களை மிக தாழ்மை படுத்தினர். அவர்களை தீண்டத்தகாதவர் என்றனர். பிராமணர் முன் மேலுக்கு வரவேண்டுமானால் மாட்டு மாமிசத்தை சாப்பிடும் வழக்கம் விட்டுவிடவேண்டியதாயிருந்தது. அதின்படியே இதர எயினவமிசத்தினராகிய கைக்கோளர், பாணர், செம்மான், கம்மாளர் முதலியவர்கள் அவ்வழக்கத்தைவிட்டு மேன்மை அடைந்தார். அப்படி விடாத பறையர் தாழ்மையடைந்தார். பிராமணர்கள்தான் இவர்களை இத்தாழ்வான நிலைமைக்கு கொண்டுவந்தவர் என்று "தமிழ் வாசகங்கள்" எழுதிய சீனிவாச அய்யங்காரரே ஒத்துககொள்ளுகிறார். பறையர்களை பாப்பார் இன்னும் தங்கள் அக்கிராரங்களிலும் கிராமங்களிலும் விடுகிறதில்லை. நந்தன் சரித்திரத்தைப் படித்தால் தமிழ் பிராமணர்கள் தூரடத்தைகள் நன்றாய்தெரியும். ஆகையினல் பிராமணர் வழக்கத்தை ஏற்றுக்கொள்ளாதபடியினல் பறையர் என்போரை பிராமணர் தாழ்த்திவிட்டார்கள் என்பது நிச்சயம்.

பறவைபுறத்தார் பறையர் என்றதை கட்டபை Mr. பினேயா கோல் என்பவர் அடியில்வருமாறு சொல்லுகிறார்.

"நான் விசாரணை செய்தவரையில் இவர்கள் வீரபஞ்சமர் அல்ல. சதாசிவபிரமத்தின் ஐந்தாவது சிரசிலிருந்து உற்பத்தியான லிங்காயத்துகள் அல்லது வீரசைவர்களுக்கு வீரபஞ்சமர் என்று பெயர். அப்பெயர் இப்பறையர் என்போருக்கு தகாது. இவர்கள் மகாபாரதத்தில் சொல்லியிருக்கும் நாஸ்தீக பஞ்சமர்களுமல்ல. நாஸ்தீக பஞ்சமர் என்

பேரர் ஓர்காலத்தில் இந்துக்களாயிருந்து பின்னிட்டு சமண பௌத்த மதங்களை யேற்றுக்கொண்டவர்களுக்கு பெயர். அப்படி மதம மாறினவர் ஜாதியற்றவர்களானார்கள் - அவர்களை ஜாதியற்ற சூத்திரர் என்று சொல்லவேண்டுமே ஒழிய பஞ்சமர் எனலாகாது. காண்டன்ய, தனஞ்ஜய, வசிஸ்ட, விஸ்வாமித்திர கோத்திரத்தார் சூத்திரர் யானுர்களே ஒழிய பஞ்சமர் ஆகவில்லை. இந்தபதம ஓர்காலத்தில் ஆரியரில் ஜாதிகெட்டவர்களுக்கு உபயோகிக்கப்பட்டதால் இவர்களுக்கு தகாது.'' இவர்களிட பூர்வீக சரித்திரத்தை அடியில்வருமாறு கூறுகின்றனர் :—

" இவர்கள உண்மையான சரித்திரம் கசியப்ப பிரமாவிடமிருந்து ஆரம்பிக்கிறது கசியப்ப பிரஜாபதியின் இரண்டாவது மனைவியாகிய திதி என்பவளின் குமாரர்கள். பரிசுத்த சாஸ்திரங்களில இவர்களுக்கு "தைத்தியர்" என்று பெயர். கசியப்ப முனிவரின் முதல தாரமாகிய அதிதியின் குமாரர்களுடன் எக்காலமும் சண்டைசெய்ய முடியாமல் தெனனட்டிற்கு வந்து அவ்விடமே நிலைக்கலாயினர். அவர்களிட அரசன ஹிரண்யகசியப்பர் என்பவர் **பிரஹலாதன் ஆம்லாதன்** பின்னிட்டுவந்தவர். சென்னபட்டணம அடுத்த மகாபலிபுரத்தில அரசுசெய்த **மகாபலி** என்பவர் பின் சக்கிரவர்த்தி யாயினர். பிறகு **பாணராஜா** ஆண்டார். பிறகு இந்த ராஜ்ஜியம ஜெயிக்கப்பட்டது. அப்பொழுது அதற்கு **தொண்டைமண்டலம்** அதாவது **தொண்டர்**, அடிமைகளின், **மண்டலம்**, நிலம என்கிற பெயர் வந்தது. அக்காலத்தில் அதற்கு இரண்டு ராஜதானிகளிருந்தன. ஒன்று **பறவைபுரம்** - பறவைபுறத்தி லிருந்தவர்களுக்கு **பறையர்** என்று பெயர். இவர்கள் தமிழர். பறவைபுறம் - கீர்பட்சிகளாகிய - **பறவை** என்கிற பதத்தி லிருந்துவந்தது. கீர்த்திபெற்ற வாத்துகளுக்கு இப்பொழுதும் பேர்பெற்ற தற்கால காஞ்சி

புறததுக்கு தான் பறவைபுறம என்று பெயர் இருந்தது. இன்னம் மைசூர் ராஜ்ஜியபத்தில கோலார் ஜில்லாவில் மாலாடு என்கிற பட்டணம் உண்டு. இவர்களில் தெலுங்கு பேசியவர்கள் இங்கிருந்தார்கள். அவர்களுக்கு அயலாராகிய கன்னடியர் அவர்களை அவர்கள் ஊரை அநுசரித்து மாலரு என்று பெயரிட்டார்கள்.”

## 3. பறை அடிப்பதால் பறையா எனறது.

திராவிடர் சரித்திரம் நன்குணாநத ஒருவர் சொல்லுகிறதாவது. திராவிடரில் ஆதியில மூன்றுவகுபபுகள் உண்டு. அதாவது 1. குருக்கள். 2. வணிகர். 3. வேளான்கள். இவைகள ஜாதிவகுபபல்ல. பறையா என்போர் மூன்ருவது வகுப்பை சேர்ந்திருககலாம. அக்காலததில அவர்களை தொடக்கூடாது என்று ஒன்றுமில்லை. அவாகளும் ஆதியில் மற்ற தமிழர்களுடன் ஒருவரோடொருவர் விவாகம போசனம முதலியது செய்துவநதனா. பூர்காலத்தில் அரசாகளுக்குள் அடிககடி யுத்தங்கள் நேரிடுகிறதுண்டு. அநதகாலஙகளில் இவர்கள் பறையடிபபது வழக்கம. அப்பொழுது பறையடிக்கும தொழில் வெகு சிரேஷ்டமாகவே யிருநதது. யுத்தகளத்தில் சேனைகளுககு முன்சென்று பறையடிபபதை அரசர்களும் நன்கு மதித்தாாகள. அவர்கள் அரசாகளுககு அத்தியவசிய மானவர்களா யிருநதாாகள். அமமாதிரி யுத்தகாலங்கள் சென்றபிறகு மற்றவாகளுக்கு அவர்களைபபற்றிய அககரை குறைந்தது. அதன்மேல புத்தமதமும சமணமதமும் விர்த்தியாயின. அதற்குமுன் எல்லாதிராவிடரும மாட்டு மாமிச பட்சனிகளா யிருநதவர்கள்தான். மேற்குறிதத மதங்களால் தமிழர்கள் மாமிசம சாப்பிடுவதை விட்டுவிட்டனர். மாடு பரிசுத்த பிராணியாய்விட்டது. பறையர் என்போர் மட்டும் விடவில்லை. பறையினுல்தான் அவர்கள் சிறப்

படைந்தது அதினால் தான் அவர்கள் சிறப்பு பின்னிட்டு குறைவுபட்டது. அவர்கள் பறையடிக்கும் தொழிலை விட வில்லை யுத்தகாலங்களில் இல்லாவிட்டாலும் மற்ற விவாக மரணகாலங்களில அவர்கள் பறைபடிக்க வேண்டியதாய் நேரிட்டது. அப்படி அவர்கள் அடிக்கும் பறைக்கு தோல தே வையானது தோலை பிரித்து எடுப்பதற்கும அந்த மாமி சத்தை சாப்பிடுவதற்கும அதிக வித்தியாச மிலலாமையால் அவர்கள் மாட்டு மாமிசத்தையும சாப்பிட்டுக்கொண்டே யிருந்துவிட்டார்கள். அதனால்தான் இவாகள் தாழ்ந்த ஸ்திதிக்கு வந்துவிட்டார்கள் எனபது ஒரு கொள்கை.

4 "பறையர்", பௌத்தர் என்பது.

பௌத்தமதம அசோக அரசர் ஆண்டகாலத்தில் இந்தியாவின் எல்லா பாகங்களிலும் இதரதேசங்களிலும பரவியது. சிலப்பதிகாரம மணிமேகலை முதலிய காவியங்களிலும் பெரிய புராணத்திலும இன்னும அநேக நூலகளிலும் தென்னிந்தியாவில பௌத்தமதம் பரவியிருந்தது என்பதாக சொல்லப்படுகிறது. பௌத்தமதத்தையும சமணமதத்தையும துரததிவிட சைவமும வைஷ்ணவ மதமும செய்த பிரயத்தனஙகள் தமிழ் நூல்களில் விசாலமாய் காணலாம். சென்னையில் கீர்த்திபெற்று யிருந்தவரும தமிழ் நூலகளை நன்றாய் ஆராய்ச்சி செய்திருந்தவருமான ஸ்ரீமான் அயோத்திதாஸ் பண்டிதர் என்பவா பறையர் என்போர் பௌத்தமதத்தை ஏற்றுககொண்டதினால் இவ்வித தாழ்மைநிலமைக்கு கொண்டுவரப்பட்டார்கள் என்று அநேகநூலாதரவுகளுடன் ருஜுவுசெய்கின்றார். இதுவிஷயம் அவர் எழுதியிருக்கும் நூல்களெலலாவற்றையும வாசிக்க தகுதி உடையன. அவைகளை அனுசரித்து "பறையர்" என்போர் அநேகர் பௌத்தமதத்தை இச்சென்னை ராஜதானியில் தழுவியிருக்கின்றனர். ஹுயன் திசாங்கு என்கிற சீனதேசத்து பிரயாணி சுமார்- கிபி.

630 ஆண்டில் இந்தியாவிற்கு வந்தபோது தென்னிந்தியா விற்கும் வந்தார். அப்பொழுது அவா காஞ்சிபுறத்தை போய் பார்த்தபோது அவ்விடத்தில் பத்தாயிரம புத்தமத காம குருக்களேயும் புத்தமடங்களேயும் பார்த்ததாகவும் சொல்லு கிறார். முன்சொன்னபடி காஞ்சிபுறம பறவைபுறமாகிறது. இபபொழுதும செங்கலபட்டு வட ஆர்க்காடு தென ஆர்க்காடு ஜில்லாககளில் " பறையா " என்போர் அதிகமாயிருக்கின்ற னர். ஆகையினுல காஞ்சிபுறம பௌததமததுக்கு அக்கா லததில் தென்னிநதியாவில சிரேஷ்டமான இடமா யிருநதி ருககவேண்டும. இமமாதிரி தென்னிநதியாவில் பௌதத மததைத தழுவியவா " பறையா " என்போரின் முன்னோா கள். இவர்களே பிராமணா அதிகாரம ஏற்படடபிறகு அவா கள் " பறையர் " என்று தாழ்மைபடுததினா. " பறையா " என்போா புததமததைத தழுவினபடியினுல பிராமணரிட வேதங்களே நமபாதவர்களாயினா. அபபடி அவர்கள் வேதங களே நமபாமல அவாகளே ஏததுககொள்ளாதவாகள் " சண் டாளர் " என்றார்கள். தற்காலத்திலும ஒரு இநதுவான வன் கிரிஸ்துமததததில் சேர்நதுகொண்டால அவன் பிராம ணர் வேதங்களே நபபாதவனுகிறுன். அபபோபபடடவனே " பறையன் " என்று சொலவது வழககமுண்டு பூாவத தில இலங்காதேசமென்றும, தற்காலம கொளமபு - கண்டியென்றும வழங்கும்படியான தேசத்தில வாழுமகுடி கள் யாவரும் பெருமபாலும பௌததாகளென்பது சகல ருக்கும் தெரிநதவிஷயமாகும். சமஸ்கிருதத்தில் வரைந துள்ள சுந்திரகாண்டத்தில் அநுமார் இலங்கைசேர்ந்து அவ விடத்திலுள்ள மாளிகையிலுட்கார்நது அதனே புத்தர் வியா ரமென்றும கூறியதாக விளங்குகின்றது. அவ்வகை பௌத்தநாடென்று தெரிநதே தற்காலம இராமநாடகம பாடிய அருணுசலக்கவிராயர் என்பவர் தானியற்றியுள்ள

சுந்திரகாண்டத்தில் இலங்கைதீவை பறையர் ஊரென்று இழிவுபடுத்தியே பாடிவைத்திருக்கின்றார்.

## சுந்தரகாண்டம்.

### சீதைபுலம்பல்.

" நிறை தவசுகருக் குறையிலவளென்று
நினைத்துகை விடுவாரோ
பறையர் ஊரிலே சிறையிருந்த வென்னை
பரிந்துகை தொடுவாரோ.'

"பறையர்" என்போர் மனுதர்மசாஸ்திரத்தில் குறிப்பிட்டிருக்கும் "சண்டாளருக்கு" சமப்படுத்தினார்கள். மனுதர்மசாஸ்திரம் எழுதியகாலத்தில் தமிழகத்தில் "பறையர்" என்ற பெயரே கிடையாது. ஆனபடியினால் மனுதர்மசாஸ்திரத்தில் "பறையர்" என்கிற வார்த்தையே கிடையாது. ஆனால் அந்த சாஸ்திரத்தில் "சண்டாளன்" என்கிற பதமுண்டு. மனு சொல்லுகிறபடி "சண்டாளன்" என்பவன் பிராமணஸ்திரிக்கும் சூத்திர தகப்பனுக்கும் பிறந்தவன். அப்படி இருந்தால் இச்சண்டாளர் என்போர் ஆரியநாட்டில்தான் இருந்திருக்கவேண்டும் ஆனால் மிஸ்டர் ரோமிஸ் சண்டா ட்ட என்பவர் வெங்காள ராஜதானியிலிக்கும் 3 கோடியே 60 லட்சம் ஜனங்கள் இம்மாதிரி சண்டாளர் என்பதை ஒத்துக்கொள்ளுகிறதில்லை. ஆரியர் சாஸ்திரபடி மேல்ஜாதியார் கீழ்ஜாதியாருடன் விவாகம் செய்துக்கொள்ளலாமென்று இருப்பதால் அவ்விதம் பிறந்த பிள்ளைகளை சண்டாளர் என்பது தகாது.

ஆரியநாட்டில் சமண பௌத்தமதங்களை சேர்ந்தவர்களுக்கு ஆரியர் நாஸ்திக பஞ்சமர் என்றார்கள். தென்னாட்டு பிராமணர்கள் அப்பேர்ப்பட்டவர்களை பறையர், சண்டாளர்

என்றார்கள். மனுதர்மசாஸ்திரத்தில் சண்டாளனுக்கு அடியில் குறித்தவாறு தெண்டனை சொல்லியிருக்கிறது:—“ தங்களுக்கு தகுந்தவேலைகளை செய்துகொண்டு, இவர்கள் காட்டிலாவது, சுடுகாட்டு பக்கங்களிலாவது, குன்றுகளின்மேலாவது, பெரிய மரங்களின் அடியிலாவது குடியிருக்கவேண்டியது. அவர்கள் கிராமங்களின் வெளிபாகங்களிலு மிருக்கவேண்டியது அவர்களுக்கு பாத்திரங்கள் கிடையாது. நாய்களும் கழுதைகளும் அவர்கள் செல்வம். சவங்களின்மேலிருக்கும் துணிகளை அவர்கள் தரிக்கவேண்டும்; உடைந்த பாண்டங்களில் புசிக்கவேண்டும், இரும்புநகை போடவேண்டும். அவர்கள் திரிந்துகொண்டே யிருக்கவேண்டும். ஒருவன் மதசடங்குகள் செய்யும்போது அவர்களை பார்க்கவும் கூடாது அவர்களுடன் பேசவும்கூடாது. அவர்கள் தங்களுக்குள்ளவே விவாகம் செய்துகொள்ளவேண்டும். அவர்களுடன் லேவாதேவி யாரும் செய்யக்கூடாது. அவர்களுக்கு சாப்பாடு குடுக்கும்பட்சத்தில் உடைந்தபாண்டங்களில் ஆட்காரன் மூலமாய் குடுக்கவேண்டும். அவர்கள் கிராமத்தில் ராத்திரியில் திரியக்கூடாது. அரசன உத்திரவின்பேரில் பகல்காலத்தில் கிராமத்திற்குள் வரலாம் கிராமத்தில் அனாதி பிணங்களை அவர்கள் புதைக்கவேண்டியது அரசன் கொலையாளிகளென்று ஏற்படுத்தியவர்களை அவர்கள் கொன்று அவர்கள் துணிமணிகளையும் படுக்கைகளையும் எடுத்துக்கொள்ளலாம்” (மனு அதிகாரம் X. 5. 50-55.)

புத்தமதமடங்கி பிராமணர்கள் அதிகாரம் பெற்றபோது மேல்குறித்த மனுதர்ம சாஸ்திரபடி திராவிடரில் புத்தமதத்தை சேர்ந்தோரை அடக்கிவிட்டார்கள். அச சாஸ்திரப்படியே “பறையர்” என்போர் நாளைக்கு மிருக்கிறார்கள்.

# 5. அத்தியாயம்.

## பிராமணர்தான் "பறையர்", என்போரை தாழ்த்தியது.

முதலில் பிராமணர் கல்வியற்ற குடிகளையும காமிய முற்ற சிற்றரசர்களையும் வஞ்சித்து பயநது யாசிததுவந்தார்கள். அதிகாரத்துடன் பிச்சை எடுதது உண்ண ஆரம்பித்த போது திராவிட பௌத்தர்களை ஊரைவிட்டு துறத்தியும் விட்டாாகள் அததிராவிட பௌததர் பிராமணாகளின் மோச நடவடிக்கைகளை சகல குடிகளுக்கும பறைந்துவநதார்கள் அபபடி செய்தவாகளை பறையா என்று வகுதது சகல விஷயத்திலும சீாபெற விடாமல் நசிததுவிட்டார்கள். புதத விவேககுடிக ளிருக்கப்பட்ட யிடஙகளில பிராமணன் வநது விட்டால் சாணததை கரைதது அவர்களை துறத்தி சாணச சட்டியை உடைபபது வழக்கமாம். அபபடி ஓடும்காலத தில் பிராமணர் இவர்களை தீண்டலாகாது என்று சொல்லிக கொண்டு ஓடினாாகளாம. அதை அனுசரித்து விவேகமற்ற குடிகள் இவாகளை தீண்டாதவர்களென்று கூறினாகள். அபபடியே ஏற்படுததியும விட்டுவிட்டார்கள். பிராமண பருநது என்றும பறபபருநது என்றும பாபபார்நாய், பறநாய் என்றும் ஒவ்வொன்றுககும பெயர் வைத்தார்கள். வீரவாகு சக்கிரவாததியை பறையன் என்றார்கள். அரிச்சநதிர புராணமெழுதி, அதிலும "பறையன்" என்ற பெயரை பரவச் செய்தார்கள். "பூறையரை" பதிமூன்றுவர்க்கமாய்பிரித்து "பறையன்" என்ற பெயரைப் பரவச்செய்தார்கள். மேலும திராவிட பௌத்தர்களை சுத்த சலத்தண்டை நாடவிடாமலும், அம்பட்டாகளை சவரம் செய்யவிடாமலும், வண்

ளூர்களை வஸ்திரம் துவைக்கவிடாமலுமசெய் துவிட்டார்கள். இம்மாதிரியாக திராவிட பௌத்தர்கள் ஸ்தானம் செய்யாமலும் துணிகளிலலாமலும் ஏழைகளாய் போனமையால் அழுக்குடையவர்களாய் தாழ்நதநிலைமைக்கு கொண்டு வரபபட்டார்கள். தற்காலததிலும ஓர் பிராமணனை பிடிதது அவனை ஸ்தானம் செய்யவிடாமலும தரிததுக்கொள்ள வஸ்திரமிலலாமலும அழுக்குததுணிகளை போட்டுக்கொள்ள செய்தால் அவன் " பறையன் " போல் தானிருபபான்.

" பறையர் " என்போா இநத ஸ்திதிககு வநததற்கு காரணம பிராமணர்களதாம என்பதறகு சநதேகமிலலை. கி. பி. 7-வது நூற்றாண்டில் தென்னிநதியாவிறகு வநத ஐயனதிசாங்கு என்பவா சொலலுகிறதாவது "பிராமணர் சமயபேதககாராகளுடனும அவாகள் கடவுள்களுடனும சண்டை செய்துககொண் டிருநதபோதிலும அமமதம (புததமதம) நிஜமாகவே தெனனிநதியா முழுமையும உன்னத ஸ்திதியிலிருநதது."

இசசாட்சியததிலை புதத மததுடன் சண்டை செய்தவா பிராமணா என்று ஏற்படுகிறது. திராவிடா பௌததர்களை, பறையராக தாழ்ததியது பிராமணா என்பதறகு வேறு சாட்சியம வேண்டியதிலலை. திராவிட பௌததர்களுக்கு பெருதத விரோதிகள் பிராமணரேயாம. இதைத தவிர தமிழ் வாசகம எழுதிய ஸ்ரீமான், யம. ஸ்ரீனிவாச அய்யங்கார், M. A. அவாகள பிராமணர். திராவிடா சங்கிதி தெரிநதவராயு மிருககிறார். அவா சொலலுகிறதாவது :—
" எலலாவற்றிற்கும மேலாக பறையர் ஜாதியை ஏற்படுத்திய சூழ்சசியில் முதல காரணம் பிராமணரிட விலக்குகையே." விவேகானநத சுவாமிகளும இந்துதேசம தாழ்வடைந்தது பிராமணர்களால்தான் என்கிறாா. அவர் சொலவதாவது : "கடித்த பாம்பே தான் கக்கிய விஷத்தை தானே

உரிஞ்சால், கடியுண்ட மனிதன் பிழைப்பான் என்கிற ஓர் குருட்டு நம்பிக்கையுண்டு. அப்படியானால் பிராமணர் தங்களிட விஷத்தை தாங்களே உரிஞ்சவேண்டும்."

ஆலசிய மகாத்மியம் என்கிற பூர்வீக நூலில் 69-வது அத்தியாயத்தில் தங்கள் மத நம்பிக்கைக்காக பௌத்தர்களும் சமணர்களும் எப்படி தலை வெட்டுண்டார்களென்றும், சிலருடைய தலைகள் எப்படி எண்ணெய்செக்கில்வைத்து ஆட்டப்பட்டதென்றும், எப்படி கழுவேற்றப் பட்டார்களென்றும், அப்பேர்ப்பட்டவர்கள் திரேகங்களை குள்ளநரி, நாய் பட்சிகளுக்கு இரையாக விடப்பட்டதென்றும் பரக்கக் காணலாம். மேலகண்ட அவஸ்தைகளெல்லாம் மதுரை மீனாட்சியம்மன் கோவிலின் பரிசுத்தகிணற்றின் சுவற்றில் ஒரு பெரிய தட்டினமேல் எழுதியிருப்பதை இப்பொழுதும் பார்க்கலாம். ஐயன் திசாங்கு சாட்சியத்தினால் இம்மாதிரியெல்லாம் சமணர் பௌத்தர்களை நசுக்கியது பிராமணர் என்பதற்கு யாதொரு சந்தேகமுமில்லை.

தற்காலத்தில் சில பிராமணரல்லாத மற்ற ஜாதியாரும் இதற்கு உத்திரவாதம் என்பார்கள். சில திராவிடர் பூர்வீகத்தில் கல்வியின்மையால் பிராமணரிட ஜாதிவித்தியாசத்தை ஏற்றுக்கொண்டனர். மற்ற திராவிட ஜாதியாரும் தாழ்த்தப்பட்டவர்களே. அவர்களையும் பிராமணர் தீண்டுகிறதில்லை. இப்பொழுது பிராமணர் தங்களை ஏமாற்றிவிட்டார்களென்று மற்ற ஜாதியுள்ள திராவிடர் அறிந்துகொண்டார்கள். தற்காலம் இளம்பியிருக்கும் பிராமணரல்லாதார் இயக்கத்தினர் பறையர் என்போருடன் சமபந்தி போசனம் செய்து காண்பித்தனர். திராவிடன் முதலிய பத்திரிகைகள் இன்னும் அதிகமாய் பரவ நாளுக்குநாள் திராவிடஜாதியார் எல்லாரும் பறையர் என்போரை சமமாக ஏற்றுக் கொள்வார்கள். தற்காலம் மற்ற திராவிடர் அறிவின்மை

யால் ஜாதிவித்தியாசத்தை பாராட்டுகின்றனர். பிராமணரோவெனில அவர்களுக்கு தாங்கள் செய்தது பிசகென்று தெரிந்தும ஜாதிவித்தியாசத்தை அப்படியே நீடித்து வளர்க்கவேண்டுமென்றும பறையர் எனபோரை காலின்கீழ் நசுக்கி வைக்கவேண்டுமென்றே நினைக்கிறார்கள். இதற்கு சாட்சியம் அவர்களிட வர்ணாசிரம இயக்கமே போதும. பிராமணர்கள் பறையா என்போரை விர்த்திக்கு கொண்டுவர பிரயத்தனப படுகிறதில்லை கொஞ்சகாலத்துக்குமுன் ஆனரிபில் வி. கிருஷ்ணசாமி அய்யங்கார அவர்கள் "பறையாகள் அந்த ஸ்திதியிலிருப்பது அவர்கள் கருமத்தினால் என்றும தாங்கள் செய்யவேண்டியது ஒன்றுமில்லை என்று சொனனார். இதுதான் எவ்வித பிராமணனும சொல்லிக்கொண்டிருக்கிறான. சுயஆட்சி கேட்கும இக்காலத்திலுங்கூட ராஜபாதையில "பறையா" என்போர செல்லக்கூடாது என று பிராமணர் தகரார் செய்கிறாகள். திராவிட சகோதராகளாகிய ஆதி திராவிடா நன்று யோசித்து மற்ற திராவிடாகளுடன சகோதரபாவம பாராட்டுவாராக.

# 6. அத்தியாயம்.

## ஆதிதிராவிடர் சிறப்பை நாடினவர்.

இமமாதிரி யெல்லாம் ஆதி திராவிடரை தாழ்த்திபதை நீக்கி, யார் யார் உயர்த்த பிரயத்தனப்பட்டனர் என்பதை இனி யோசிப்போம. திராவிட பௌத்த கவிஞர் தங்களை கீழ்படுத்தியதை ஒத்துக்கொள்ளாமல் பாடல்களை பாடியிருக்

கபிலர்மேல் சொல்லியபடி தமமகவலில் ஜாதி வித்தியாசத்தை பிராமணர் நாட்டினர் என்று சொல்லி பிறப்பில் ஜாதியில்லை யென்கிற கருத்துடன்.

“தென்திசைப்புலையன் வடதிசைககேகி
பழுதரவோதி பார்ப்பானுவான
வடதிசைப்பார்ப்பான் தென்திசைக்கேகி
நடையதுகோணி புலையனுவான்.”

என்றார், இவர் அகவல் முழுமையும் படிததுபார்க்கவும.
சிவவாக்கியர் அடியில்வருமாறு பாடினா.

பறைச்சியாவ தேதடா
பணசதியாவ தேதடா
இறைச்சிதோ லெலும்பினு
மிலக்கமிட் டிருக்குதோ
பறைச்சி போகமவேறதோ
பணதகி போகமவேறதோ
பறைச்சியும பணத்தியும
பகுத்துப் பாருமு முளே.

அவிரோத உநதியார் வுரையாசிரியர்.

“அறுவகை சமயததரையு மெய்ப்பொருளு
மறுபததிநாலு நற்கலையு,
மறுவறபபயின்று மாசரததிகழு
மறிஞராமவர்களே யெனினுங,
குறைவறத் தனைக் கொடுததிடுங்குறவன்
குரைகழல பணிநதவரனறேல்,
பறையா மறறவரை பறையரே யெனினு
மருளுடையவா பரமபரரே.”

ஞானவெட்டி யாக்கிய சாம்பவனார் அடியில்வருமாறு
சொல்லுகிறா.

“விட்டகுறை வருமளவும் உபதேசஙகாண்
மெய்யுடலுநதளர்ந்து புவிமேலுநோககி
தட்டழிநது விழும்போது வோதிவைதத
சாததிரததை கூணப்போது மறியப்போமோ

எட்டிரண்டு மறியாதார் குருக்களாமோ
யென்னை பினி பறையனென்று தள்ளப்போமோ
மட்டமரும் பூங்குழல்வா லாமபிகைப்பெண்
வங்கிஷத்திலுதித்த சாமபவனும் நானே.”

இவைப்போன்ற அநேக பாடல்கள் திராவிடர் பௌத்த கவிஞர்கள் வரைந்துளார்.

மற்ற திராவிட புலவர்களும் அம்மாதிரியே வரைந்துளார். சித்தர்கள் பிராமணர் ஏற்படுத்திய ஜாதிவித்தியாசங்களுக்கும் பிராமணா வேதங்களுக்கும ஆசாரங்களுக்கும் விரோதிகள் அவர்கள் “பறையா” என்போரை உயர்த்த முயன்றார்கள்.

உதாரணமாக குதமபைசித்தா சொல்லுகிறார்.

குதமபைச் சித்தர் பாடல

“ஆண்சாதி பெண்சாதி யாகுமிரு சாதி
வீண்சாதி மறறசெலலாங் குதமபாய்—வீண்
பார்ப்பார்கள மேலென்றும பறையோர்கள கீழென்றும
தீர்ப்பாகச சொலவசென்ன குதமபாய்—தீழ்ப்பா
கர்த்தன் பறையோரைப் பாரப்பாரைப் போலவே
திரப்பாய் படைத்தாரோடி குதமபாய்—தீழ்ப்பா”

பததிரகிரியார் தமபிட புலம்பலில.

“ஆதிகபிலர் சொனன யாகமததின சொறபடியே
சாதிவரையிலலாமற் சஞ்சரிப்பதெககாலம.

இன்னொரு புலமபலில்,

“சாததிரத்தை சுட்டு சதுர்மறையை பொய்யாக்கி
சூததிரத்தைக்கண்டு சுகமபெருவ தெக்காலம்,

என்றார்.

தேவி காலோத்திரத்திலேயே அடியில்கண்ட பாடலிருக்கிறது.

" சமையாசார சங்கற்ப விகர்ப்பமு
மமையார்தாம குலவாசார மானது
மிமையாதாரும் விடாத வில்லாழ்க்கையு
மமையார் தோளாய் விடுதலா சாரமே."

இம்மாதிரி யின்னம அநேகபாடல்கள் எடுத்து எழுத லாம். இடமின்மையின் இங்கு சிலவற்றை கூறுவோம்.

பாச்சலூர் பதிகம.

" ஒருபனை இரண்டுபாளை ஒன்றுநுங கொன்று கள்ளு
மறிவினி லுயாந்தவர்க்கு அதுவுங்கள் இதுவுங கள்ளே
ஒருகுலை உயர்ந்ததேனோ ஒருகுலை சாழ்ந்ததேனோ
பறையனைப் பழிப்பதேனோ பாச்சலூா கிராமத்தாரே."

நலவழியில்.

" ஜாதியிரண்டொழிய வேறில்லை சாற்றுஙகால்
நீதிவழுவா நெறிமுறையின்—மேதினியில்
இட்டார் பெரியோா ரிடாதா ரிழிகுலததோா
பட்டாங்கி லுளளபடி."

இன்னும ஒருவா கூறுவதாவது:—

" பறையனைப் பறையரென்று பறைந்திடு மனிதர்கேளீர்
பறைபர்தம மலதைத்தின்னும பனறியைப் புசிபபதென்னோ
கறையதே யாகுமந்த கறிதனைக் கலத்தினிட்டு
மறையவே வைததுத்தின்னு மனிதரே பறையர்கண்டீர்."

இம்மாதிரியாக தமிழ் புலவர்களும் மற்றவர்களும் ஜாதி வித்தியாசததை நீக்கவும் பிராமணர் ஆசாரம் வேதங்கள் இவைகளை நீக்கிவிடவும பலவிதமாய் பாடல்கள் மூலமாய் பிர சங்கித்துவந்தார்கள். ஆயினும் ஜாதி வித்தியாசங்கள் நீங்க வில்லை. இந்துமதம் ஜாதியின்பேரில் கட்டப்பட்டிருக்கிறது. ஜாதியை நீக்கினால் மதம கெட்டுப்போகிறதாக நினைக்கிறார்

கள். ஆங்கிலேய நாகரீகமும் கல்வியும் இத்தேசத்திற்கு வந்தபிறகு எல்லாரும் கண்திறந்து கொண்டார்கள். ஆயினும் பூர்வகாலத்தைப்போல் தற்காலத்தில் மூடர்களிருப்பதால் முழுமையும் நீக்கக்கூடாமலிருக்கிறது. ஆயினும் ஆசார சீர்திருத்தக்காரர் ஜாதி வித்தியாசததை ஒழிக்க முயர்ச்சி செய்கின்றனர் ஆதி திராவிடரை விர்த்திசெய்ய ஆரிய சமாஜம் அதிக பிரயததனபபடுகிறது எவரும்பினும் ஆரிய சமாஜத்தில் சேர்நதால் அதைச சேர்ந்தவர்கள் அவனை சமமாக ஏற்றுக்கொள்ள தயாரா யிருக்கிறார்கள். அநேக அத்தேசத்து பஞ்சமர்கள் அதில் சேர்ந்திருக்கிறார்கள். இன்னம் ஒருசபை பிரமசமாஜ் என்பது இவர்களுக்கு கூட ஜாதி விததியாசம் கிடையாது. ஆனல் சென்னப்பட்டணம பிரமசமாஜததார் ஜாதியை ஒழிககவில்லை இவர்களும் பஞ்சமர்களுக்கு அதிகமாய் உழைக்கிறார்கள். தாழ்த்தப்பட்டவர்களை உயர்த்த Depressed Classes Mission பல இடங்களில் இநதியாவில தற்காலத்தில் எறபட்டுவருகின்றன. கிரிஸ்து மதமும மகமத்திய மதமும் அநேக ஆதி திராவிடர்களுக்கு நன்மைகள் செய்திருக்கின்றன. ஆங்கிலேய கவர்ன்மென்டாரும அநேக நன்மைகள் செய்திருக்கிறார்கள். இனி செய்யவும போகிறார்கள்.

## 7. அத்தியாயம்.

### முடிவு.

ஆதி திராவிட சகோதரர்களே! நீங்கள் மாட்டிறைச்சி உண்பதினலேயே உங்களுக்கு தாழ்மை இக்காலத்தில் உண்டாகாது. இந்துக்களிலேயே மாட்டிறைச்சி சாப்பிடும்

பெத்தபோயஜாதி முதலிய ஜாதிகளுக்கும் ஆங்கிலேயருக்கும் மரியாதை யிருக்கிறது. நீங்கள் கல்வியில்லாமல் ஏழ்மை தனத்தி லிருப்பதால்தான் இவ்வித கஷ்டங்கள் நேரிடுகிறது. உங்கள் ஏழ்மைத்தனத்தை நீக்கவும், செல்வமுள்ளவர்களாகவும், சிறந்த கல்விமான்களாகவும் நீங்கள் ஆனால் உங்களுக்கு மேன்மைதானே உண்டாகிறது. நீங்கள் ஏழைகளாயிருந்தாலும் நன்னடக்கை யுள்ளவர்களே என்பதற்கு ஐயமில்லை. 500 ரூபாய் மாதம் சம்பளமுள்ள ஓர் பிராமண உத்தியோகஸ்தன் லஞ்சம் வாங்கினாலும் ஒரு ரூபாய் சம்பளமுள்ள கிராம ஆதி-திராவிட தலையாரி தன்னிடம் மணியகார் குடுத்த ஆயிரம் ரூபாய் சர்க்கார் பணத்தை ஒரு பிசகுமில்லாமல் தாலூக்கா கச்சேரியில் யோக்கியமாய் கொண்டு வந்து கட்டுகிறான் இந்துமதத்தில இத்தியாதி சங்கடங்களிருக்க நீங்கள் என் அம்மதத்தி லிருக்கவேண்டும் உங்கள் பூர்வீக மதமாகிய பௌத்த மதத்தில் சேருதல் நலமன்றோ. அல்லது மற்ற உயர்ந்தஜாதி என்கிற இந்துக்களில் படித்தவர்கள் ஏற்றுக்கொண்ட பிரம சமாஜத்தை நீங்கள் ஏற்றுக் கொள்ள ஆக்ஷேபணை என்ன? இவைகளை யோசித்துபாருங்கள். ஆங்கிலேயே அரசாட்சியில் எல்லாரும் சமம் அப்படியிருக்க உங்களிட சமபாத்தியத்தை அனுபவிக்க ஒட்டாமல் யாராவது செய்தால அதை விட்டுவிடக்கூடாது. உங்கள் பாத்தியதைகளை நிலைநாட்டுங்கள் ஓமரூல் காரருடன் சேராதீர்கள். ஆங்கிலேயா உங்கள் கையினால செய்யப்பட்ட சாப்பாட்டை சாப்பிட்டு அவர்கள் உங்களை சகோதரர்களாக நினைக்கிறார்கள் அவர்கள் வந்தபிறகுதான் உங்களுக்கு மேன்மை உண்டாகிவருகிறது. நீங்கள் மேல் நிலைமைக்கு வருகிறதை அவர்கள் காலத்தில் அதை கெடுக்க யாராலும் முடியாது. ஓமரூல் வந்துவிட்டால் உங்கள் கதியும் மற்ற திராவிடர் கதியும அதோகதிதான். புத்தமார்க்கம் சென்ற

பிறகு பிராமணர்கள் மறுபடியும் ஜாதி வித்தியாசங்களை அதிக கடூரமாய் ஏற்படுத்தி திராவிடர்களை இம்சிக்கலாயி னார். அதிலும் ஆதி திராவிடர்களாகிய உங்களை வெகு ஈனஸ்திதியில் கொண்டு வந்து வைத்தார். அந்தஸ்திதி யில் ஆங்கிலேயர் இத்தேசம் வருகிறவரையில் நீங்கள் இருந் தீர்கள். இப்பொழுது அவர்களை எதிர்த்து மேலே வருகி றீர்கள். நீங்கள்மாத்திரமல்ல மற்ற திராவிடர்களும் அவர் கள் பிடிப்பிலிருந்து வெளிப்பட்டு வருகிறார்கள். அப்படி தங்கள் பாதத்தடியிலிருந்து திராவிடர் தப்பி ஓடாதபடி, அவர்களை விர்த்திக்கு கொண்டுவந்தவர்களும் எல்லாரையும் சமமாக நடத்தும் ஆங்கிலேயரைத் துரத்திவிட்டு தாங்கள் மறுபடியும் திராவிடராகிய நம்மை காலடியில் நசுக்கவேண்டு மென்று பிராமணர் சுய ஆட்சி கேட்கிறார்கள். அதற்கு நீங்கள் கொஞ்சமேனும் இடந்தரலாகாது. உங்களால் ஆன வரையில் சுய ஆட்சி தற்காலம் கூடாதென்று எதிர்த்து நிற்கவேண்டும். சுயஆட்சி வேண்டுமென்கிற வாயிலேயே வர்ணாசிரம தர்மத்தை நிலைநாட்ட வேண்டுமென்கிறார்கள் இப்பிராமணர்கள். ஓர் பிராமண பைஸ்வா அரசாட்சியில் பறையர் என்போர் வெளியில் வந்தால் அவர்கள் தங்கள் கழுத்தில் சட்டியை மாட்டிக்கொண்டும் இடுப்பில் துடைப் பத்தை கட்டிக்கொண்டும் வரவேண்டியதா யிருந்தது. ஆகையால் பிராமண அரசாட்சி வேண்டாம். நன்றாய் யோசித்துப்பாருங்கள்.

PRINTED AT THE G. R. C. PRESS, MADRAS—9-'20—1000.